## 55. எனக்குள்ளே இருப்பவர் என்றும்

### பல்லவி

எனக்குள்ளே இருப்பவர் என்றும் பெரியவர்
எனக்குள்ளே வாழ்பவர் சர்வ வல்லவர்

### அனுபல்லவி

*பள்ளத்தாக்கின் லீலி சரோனின் ரோஜா*
*பதினாயிரத்தில் சிறந்த இயேசு ராஜா*

### சரணங்கள்

1. வெண்மையும் சிவப்பும் ஆனவரே
புறா கண்கள் உடையவரே
கரும் சூருள் முடி உடையவரே
தலை தங்க மயமானவரே
- பள்ளத்தாக்கின் லீலி

2. என் நேசர் இனிமையானவரே
காட்டுக்குள்ளே கிச்சிலி மரமே
சரோனின் ரோஜாவாய் இருப்பவரே
மருதோன்றி பூங்கொத்தே
- பள்ளத்தாக்கின் லீலி

3. நீதியின் சூரியன் போன்றவரே
விடிவெள்ளி நட்சத்திரமே
ஊற்றுண்ட பரிமள தைலமே
உலகமெல்லாம் உம்மனமே
- பள்ளத்தாக்கின் லீலி